விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 328 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 26 சனிக்கிழமை (12.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

### ராஜிவ் காந்தி கொலை வழக்கு

## நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட ஏனைய அறுவரும் நேற்று விடுதலை

### இந்திய உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



நளினி | முருகன் | சாந்தன் | ரவிச்சந்திரன் | ரெபேர்ட் பயஸ் | ஜெயக்குமார்

(டில்லி) இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட ஏனைய 6 பேரையும் விடுதலை செய்ய இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## நிதி மோசடி; யாழில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

நிதி மோசடியில் ஈடுபட்ட நால்வர் 11

## திடீர் சுற்றி வளைப்பு

### பெண் உட்பட மூவர் கைது

(கோப்பாய்)

கோப்பாய்பொலிஸாரினால் நேற்று திடீர் சுற்றி வளைப்பு மேற்கொள் 12

### வன்முறைக் கும்பலால்

## வீடு தீக்கிரை

### ஏழாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியில் நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்றினால் வீடொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டினுள் நேற்றுமுன்தினம் 11

## இலங்கை தொடர்பான தீர்மானம் ஐ.நாவில் சமர்ப்பிப்பு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் தலைவர் ஃபெட்ரிகோ வில்லேகாஸ், நியூயோர்க்கில் நடைபெற்ற 77ஆவது பொதுச் சபை அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளார்.

2022 செப்டெம்பர் 12 முதல் ஒக்டோபர் 7 வரை நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களில் 12



## மண்ணெண்ணெய், டீசல் விலை உயர்வு

(கொழும்பு)

எரிபொருள் விலையில் மாற்றம் செய்யப்பட் டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனம் அறிவித்துள்ளது.

ஓட்டோ டீசலின் விலை 15 ரூபாயால் உயர்த்தப்படுகின்றது. இதன்படி புதிய விலை 430 ரூபாய். மற்றும் மண்ணெண்ணெய் 25 ரூபாயால் அதிகரிக்கப்படுகிறது. 12

### பொருளாதார நெருக்கடி

## பொதுமக்கள் மீது பேரழிவுகரமான தாக்கம்

### சர்வதேச மன்னிப்புச் சபை

(ஜெனிவா)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியானது மக்கள் 12

## மலேசியாவில் இருந்து யூரியா உரம்

(கொழும்பு)

யூரியா உரத்தை ஏற்றிய கப்பலொன்று 11

### யாழ்.மாவட்டத்தில்

## சீரற்ற காலநிலையால் 1025 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக 11

## மிருசுவிலில் தாய், 7 மாத குழந்தை கிணற்றிலிருந்து சடலங்களாக மீட்பு

### சந்தேகத்தினடிப்படையில் தந்தை கைது

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் தெற்குப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை தாய் மற்றும் 7 மாத பெண் குழந்தை ஆகியோர் வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

காலையில் தாய் மற்றும் குழந்தையை காணாத நிலையில் 11

### ஜனாதிபதி மாளிகையில் பணம்

## கோட்டாவை விசாரிக்க கோட்டை மன்று உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் போராட்டக்காரர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கோடியே 88 இலட்சம் ரூபாயுக்கும் அதிக பணம் ஜனாதிபதி மாளிகைக்கு கிடைத்த 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### – வடக்கு மாகாண –
## பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக வேதநாயகன்

வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவராக யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் நவம்பர் 9ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தின் பிரகாரம் நேற்று முதல் செயல்படும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவில் அங்கம் வகித்த ஐவரில் மூவரின் பதவிகள் வறிதான நிலையில் தற்போது புதிதாக மூவர் நியமிக்கப்பட்டு அதில் ஒருவரான வேதநாயகன் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் முன்னர் அரச அதிபராக இருந்த இமெல்டா சுகுமார் மற்றுமொரு உறுப்பினராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (4.7.33)

## வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பினால் ஊக்குவிப்பு தொகை
### இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விசேட ஊக்குவிப்புத் தொகை ஒன்றை வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, தனியொரு பணப் பரிமாற்றத்தில் 20,000 ரூபாய்க்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட வெளிநாட்டு நாணயங்களை அனுப்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

உரிமம் பெற்ற வங்கிகள் அல்லது வெளிநாட்டுப் பணத்தை பெற்றுக் கொள்ளும் முகவர்களிடமிருந்து குறித்த பணத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

பயனாளர்களின் பரிமாற்றல் செலவு மீளளிப்பாக இந்த ஊக்கத் தொகை வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (4-7)

### நொச்சிக்குளம் இரட்டைக் கொலை
## 22 ஆவது சந்தேகநபருக்கு சர்வதேச பிடியாணை பிறப்பிப்பு

(மன்னார்)

மன்னார் - நொச்சிக்குளம் இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய 22 ஆவது சந்தேகநபருக்கு சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் A.S.ஹிபதுல்லாஹ் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 20 சந்தேகநபர்களும் நேற்று மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட உள்ளதாக பொலிஸார் மன்றுக்கு அறிவித்துள்ளனர்.

22 ஆவது சந்தேகநபர் வெளிநாட்டிற்கு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்ததையடுத்து, அவரை கைது செய்ய நீதவானால் சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

21 ஆவது சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கைதாகியுள்ள சந்தேகநபர்களை இம்மாதம் 25 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இரண்டு சகோதரர்கள் கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## மதுபோதையில் சாரத்தியம் இ.போ.ச சாரதி கைது

(வவுனியா)

மதுபோதையில் பயணிகள் பேருந்தை செலுத்தி சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி மற்றும் நடத்துனர் புளியங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்றில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தினை செலுத்திய சாரதி மது போதையில் இருந்துள்ளார்.

சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் புளியங்குளம் பகுதியில் மாலை 6 மணியளவில் குறித்த பேருந்தினை மறித்து சாரதியை பரிசோதித்துள்ளனர். அதன்போது சாரதி மது போதையில் இருந்தமையை உறுதி செய்ததையடுத்து அவரை கைது செய்தனர்.

பேருந்து புளியங்குளம் பொலிஸ் நிலையத்திலும் சாரதி மற்றும் நடத்துனர் இருவரையும் பரிசோதனை செய்வதற்காக வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.(4.7.299)

### இன்று, நாளை
## 1 மணி நேரம் மின்வெட்டு

வாரயிறுதியில் 1 மணிநேரம் மின்வெட்டுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும் நாளை மறுதினம் திங்கட்கிழமை 2 மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன் பிரகாரம் இன்று மற்றும் நாளை A, B, C, D, E, F, G, H, I, J, K, L,P, Q,R, S, T, U, V, மற்றும் W ஆகிய வலயங்களுக்கு மாலை 5.30 முதல் இரவு 8.30 வரை 1 மணி நேரம் மின்வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளதோடு நவம்பர் 14 ஆம் திகதி திங்கட்கிழமை A, B, C,D, E, F, G, H, I, J, K, L, P, Q, R, S, T, U, V மற்றும்W ஆகிய வலயங்களில் பகல் நேரத்தில் 1 மணி நேரம் மற்றும் இரவில் 1 மணி நேரம் மின்வெட்டானது அமுல்ப்படுத்தப்படவுள்ளது. (4-7)




மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்
(இசை ஆசிரியர்)
யா/கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்
சாரங்கம் இசை மன்றம்

இன்றைய தினம் தமிழ்ச் சங்கு கலை இலக்கிய விருது விழாவில் **சாதனையாளர் விருதை** பெறும் எமது மதிப்பிற்குரிய **திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்** அவர்களை மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் பெற்ற ஏனைய விருதுகள்

2004 - **இசையரசி** - யாழ்.அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பிப் புலவரால் - நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
2012 - **இசைஞானமணி** ஸ்ரீஜயப்பதாசக் குருக்கள் - இந்து மத குருபீடம்
2014 - **இசைக்காருணி** - சாரங்கம் இசைமன்றம் நிர்வாகம்
2016 - **கீதவாணி** - யா/இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், அவுஸ்திரேலியா
2019 - **கலைச்சுடர்** - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
2020 - **இன்னிசைவாணி** - சிட்னி கொம்வாஸ் நிறுவனம்
2022 - **செவ்விழி நயனம்** - நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல்



*இசைப் பயணத்தில் மேலும் விருதுகள் பல பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்*

சாரங்கம் இசை மன்றம், நல்லூர். (13423)
மாணவர்கள், பழைய மாணவர்கள், நிர்வாகத்தினர்

## இந்திய துணைத் தூதரகம் மீதான தாக்குதல்
## மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள யாழ். இந்திய துணைத் தூதரகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இனம்தெரியாத நபர்களினால் கடந்த 9 ஆம் திகதி இரவு 9 மணியளவில் கண்ணாடி போத்தல்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தூதரகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

இந்நிலையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள யாழ். பொலிஸார், 3 பேரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதோடு, அவர்கள் பயணித்த மகிழுந்தையும் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## சர்வதேச ஏற்றுமதிக்கு தயாராகும் வாழைப்பழம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு வருவாயை ஈட்டித்தரும் ஏற்றுமதியாக வாழைப்பழம் மாறியுள்ளது.

இலங்கையில் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கும் கதலி வாழை இன்று சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் முக்கிய பழமாக மாறியுள்ளது.

இந்நிலையில் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழங்களின் முதலாவது தொகுதி சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வாழைப்பழங்களின் முதல் தொகுதி எதிர்வரும் 26ஆம் திகதி டுபாய் சந்தைக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

12,500 கிலோ வாழைப்பழத்தை டுபாய் சந்தைக்கு விடுவிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனை பகுதியில் பயிரிடப்பட்ட வாழைத்தோட்டத்தில் பெறப்பட்ட அறுவடை வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தணிக்கும் வகையில் அந்நியச் செலாவணியை ஈட்டும் நோக்கில் ராஜாங்கனையில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கவனிப்பாரற்று கிடந்த வாழைப்பழங்கள் இன்று நாட்டுக்கு டொலரை ஈட்டிக் கொடுக்கும் பழமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலையால் பாதிப்பு

# அவசர உதவிகளுக்கு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் அவசர உதவிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கங்களான 077 395 7894, 021 211 7117 அல்லது 117 எனும் இலக்கங்களுக்கு தொடர்பினை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் T.N. சூரியராஜா தெரிவித்துள்ளார். - (நி-33)

# கன மழையால் வான்பாயும் கிளிநொச்சி கனகாம்பிகை குளம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக கனகாம்பிகைக் குளம் வான் பாய ஆரம்பித்துள்ளது.

கனகாம்பிகை குளத்தின் 10 அடி 6 அங்குலம் கொள்வனவு கொண்ட குளமான தற்போது 10 அடி 11.5 அங்குலமாக உயர்ந்துள்ளமையால் தற்போது வான் பாய ஆரம்பித்துள்ளது.

இதனால் தாழ்வுபாடுகளில் உள்ள மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6-316)



நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கொக்குவில் சந்தை வளாகத்தின் சந்தை கட்டிடத்தொகுதி நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில், மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் பங்குபற்றுதலுடன் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது. (படம்:கஜிந்தன்)

## விழிப்புணர்வு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

STD கிளினிக் யாழ்ப்பாணம் தேசிய பாலுறவுநோய்/ எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டுதலுடன் முன்னெடுக்கவுள்ள யாழ்ப்பாணத்தின் முக்கிய மக்கள் தொகை விழிப்புணர்வு நிகழ்ச்சி எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்.அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(நி-6)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி



(அராலி)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபை மற்றும் யாழ்.சங்கானை சிவப்பிரகாச பாடசாலை சமூகம் ஆகியன இணைந்து குறித்த பேரணிய்ய முன்னெடுத்தன. சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான பேரணி, சங்கானை பொது நூலகம் வரை இடம்பெற்றது. இதன் போது போதைப் பொருளுக்கு எதிரான பிரச்சாரமும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு பேரணியில் வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், பிரதேச சபையினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-104)

# பருத்தியடைப்பு கடற்கரையில் கரையொதுங்கிய டொல்பின்



(கரணவாய்)

ஊர்காவற்றுறைபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பருத்தியடைப்பு கடற்கரையில் இறந்த நிலையில் டொல்பின் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை கரையொதுங்கியுள்ளது.

குறித்த டொல்பின் இறந்த நிலையில் கரையொதுங்கியமையை அடுத்து அப்பகுதி மக்கள் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த பகுதிக்கு வருகை தந்த அரச அதிகாரிகளும் பொலிஸாரும் நேரில் சென்று பார்வையிட்டனர். (நி-6-60)

# திருடப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபர் கைது

(அராலி)

தெல்லிப்பளை பகுதியில் உள்ள வீடொன்றில் திருடியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நகரப் பகுதியில் உள்ள வீடொன்றில் ஒரு சில நாட்களுக்கு முன்னர் திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதைத் தொடர்ந்து வீட்டின் உரிமையாளர் முறைப்பாட்டினை பதிவு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட தெல்லிப்பளை குற்றத்தடுப்பு பொலிஸார், கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய திருட்டு சந்தேக நபரை கைது செய்ததுடன், திருடப்பட்ட பொருள் மற்றும் விற்பனை செய்த் இரண்டு பொருட்களை மீட்டுள்ளனர்.

தொலைக்காட்சி பெட்டி, நீர் இறைக்கும் இயந்திரம் என்பன இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதை தொடர்ந்து குறித்த நபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (6-104)



(C-5232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 ஐ.பி.எல் தொடருக்கான மினி ஏலம்

எதிர்வரும் ஆண்டு ஐ.பி.எல் இருபது-20 தொடருக்கான வீரர்களின் ஏலம் நடைபெறும் இடம் மற்றும் திகதியினை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

இதன்படி ஐ.பி.எல் 2023 தொடருக்கான மினி ஏலம் எதிர்வரும் டிசெம்பர் 23 ஆம் திகதி கேரளா மாநிலம் கொச்சியில் ஐ.பி.எல் ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஐ.பி.எல் தொடரில் விளையாடும் 10 அணிகளும் நவம்பர் 15 ஆம் திகதிக்குள் தக்க வைக்கப்படும் வீரர்களின் பட்டியலை முடிவு செய்து அறிவிக்க வேண்டும் என ஐ.பி.எல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த ஏலத்தில் பங்கேற்கும் 10 அணிகளும் கூடுதலாகத் தலா 5 கோடி ரூபாவைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தங்களிடம் மீதமுள்ள தொகையுடன் இந்த 5 கோடி ரூபாவையும் சேர்த்துக் கொண்டு அணிகள் ஏலத்தில் பங்கேற்கும். 10 அணிகளில் பஞ்சாப் அணிக்குத்தான் அதிகபட்சமாக 3.45 கோடியும் 5 கோடி ரூபாய் மீதமுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிடம் 2.95 கோடி ரூபாய் மீதமுள்ளது. நடப்பு சம்பியன் குஜராத்திடம் 15 இலட்சமே மீதமுள்ளது.

இந்த ஏலத்தில் பென் ஸ்டோக்ஸ், சேம் கரண், கேம்ரூன் கிரீன் ஆகிய வீரர்கள் பங்கேற்றால் அவர்களைத் தேர்வு செய்ய பலத்த போட்டி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (6)



யாழ்.சதுரங்க முற்ற நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் அமரர் சத்தியலக்ஷ்மி காங்கேயனின் நினைவாக 2019 ஆம் ஆண்டு இடம் பெற்ற "சத்தியா ஞாபகார்த்த சதுரங்கச்சுற்றுப் போட்டியின்" பரிசளிப்பு நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி Y.M.C.A மண்டபத்தில் இடம்பெற்றது.

# பந்தயத்தின்போது தீப்பற்றிய கார்



ஜப்பானில் நடைபெற்ற காரோட்டப் பந்தயத்தின் போது காரொன்று தீடிரென எரிந்த சம்பம் நேற்று இடம் பெற்றுள்ளது. ஹையுண்டாய் அணியின் கார் ஒன்றே இவ்வாறு தீப்பற்றியது.

குறித்த காரின் சாரதிகளான ஸ்பெய்னைச் சேர்ந்த டெனி சோர்டோ மற்றும் கெண்டிடோ கரோ ஆகியோர் போட்டியிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. மரங்கள் அடர்ந்த வீதியொன்றின் ஊடாக இக்கார் சென்று கொண்டிருந்தபோது அது திடீரென தீப்பற்றியது.

இவ்விபத்தில் டெனி சோர்டோ மற்றும் கெண்டிடோ கரோ ஆகியோருக்குகாயம்எதுவும் ஏற்படவில்லை. (6)





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொன் விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் நாள் உதைபந்தாட்டப் போட்டி நேற்றுமுன்தினம் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழக அணியும் கரவெட்டி நவசக்தி விளையாட்டு கழக அணியும் மோதின. இதில் 2:0 என்ற பேற்றுக் கணக்கில் வல்வெட்டி கருணாகரன் அணி வெற்றி பெற்றது.

குறித்த சுற்றில் இரண்டாவது உதைபந்தாட்டப் போட்டியில் கம்பர்மலையங்கமன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் அண்ணாசிலையடி விளையாட்டுகழக அணியும் மோதின. இதில் 3:1 என்ற பேற்றுக் கணக்கில் கம்பர் மலையங்கமன்ஸ் அணிவெற்றி பெற்றது.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2730

**தாரா**

எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்!
"நடப்பதெல்லாம் நன்மைக்கேனு"
சொல்லுறாங்களே...



எத்தனை கிலோ மீற்றர் நடந்தா நல்லது..?

**டிலான்**

நானும் டிகிரி படிச்சு ஏழை மக்கள காப்பத்தனும்னு தான் நினைச்சேன்..



படிச்சதுக்கு அப்புறம் தன் தெரிஞ்சுது என்னையே காப்பாத்திக்கிறதே கஷ்டம்னு...

**தாரணி**

like வந்த உடனே நீங்க like போட்ட வங்கள மறந்துடலாம்.



ஆனா like போட்டவங்க நீங்க திரும்ப like போடுற வரைக்கும் உங்கள மறக்க மாட்டாங்க...

**பிரநிஷா**

கண்டக்டர்: ஏப்பா தம்பி எங்க போகனும்?



அதோ முன்னாடி டிரைவர் கிட்ட நிக்கிற அந்த ப்ளூ சுடிதார் கிட்டப் போகனும்!...

**தக்ஷி**

ஏங்க மதுரைக்கு "துரு" பஸ் இருக்கா?




இல்லீங்க எல்லாமே பெயிண்ட் அடிச்ச பஸ்தான்...!

**கருனிகா**

மனைவி:- காரணம் இல்லாம குடிக்க மாட்டேனு சொன்னீங்களே இப்ப ஏன் குடிச்சீங்க...?




கணவன்:- இல்லையடி பையன் ராக்கெட் விட பாட்டில் இல்லனு சொன்னான் அதுதான்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்
# நகராட்சி மன்றம், சாவகச்சேரி

தலைவர் பெறுகைக் குழு நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்களினால் 01.01.2023 ஆம் திகதி தொடக்கம் 31.12.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/41(3)1/OS/01/SES/2023 | பாதுகாப்புச் சேவை | 09 | 43,500.00 | 30.01.2023 |
| NP/14/41(3)1/OS/02/HLS/2023 | சுத்திகரிப்புச் சேவை | 10 | 49,000.00 | 30.01.2023 |
| NP/14/41(3)1/OS/03/DRS/2023 | சாரதி சேவை | 02 | 10,000.00 | 16.01.2023 |
| NP/14/41(3)1/OS/04/OES/2023 | அலுவலக உதவியாளர் | 02 | 7,000.00 | 16.01.2023 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு நகராட்சிமன்றம் சாவகச்சேரி தொலைபேசி இலக்கம் 021 227 0498 தொலைநகல் 021 227 0079 மின்னஞ்சல் **chavauc@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் **15.11.2022 தொடக்கம் 28.11.2022 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணி வரை** பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **15.11.2022 ஆம் திகதி மு.ப 09.00 மணி தொடக்கம் 29.11.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை** மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக **ரூபா 1,000.00 (VAT,NBT நீங்கலாக)** இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் **29.11.2022 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் **இடதுபக்க மேல்மூலையில் பெறுகை இலக்கம்** எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **22.11.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**திருமதி.சிவமங்கை இராமநாதன்**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம் சாவகச்சேரி.**

(சி-5247)

## வாகனங்களின் விலைகளில் வீழ்ச்சி

### வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் வாகனங்களின் விலைகள் குறைந்துள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணிகளால் வாகனங்களின் விலை கள் வீழ்ச்சியடைந்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் பிரசாத்குலதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்பேதைய நிலைமை காரணமாக விற்பனை செய்யப்படும் வாக னங்களுக்கு நிலையான விலை இல்லை.

வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், கடந்த காலங்களில் நாட்டில் வாகனங்களின் விலைகள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்தன. இதனால் வாகன விற்பனையும் குறைந்தது என்று தெரிவித்துள்ளார். (நி)

## சுற்றுலா விசாவில் வெளிநாடு செல்ல முயற்சித்த 586 பேர்
### திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

சுற்றுலா விசா மூலம் தொழில்வாய்ப்புக்காக சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 586 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## நிர்வாக சபைக்கூட்டம்

(சாவகச்சேரி)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற விருப்பதாக சங்கத்தின் தலைவர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தெரிவித்துள்ளார். (நி-6-30)


# இராசிபலன்

12.11.2022
ஐப்பசி 26, சனிக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 9.58 மணிவரை


மிருகசீரிடம் காலை 7.46 மணிவரை
சுபநேரம் 3.06-4.36 மணிவரை
இராகுகாலம் 9.06-10.36 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
கேட்டை

**வளவன்**


மேஷம்


நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கடகம்

எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.


துலாம்

தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், இனிமையாகப் பேசி காரியம் சாதிக்கும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மகரம்


உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


ரிஷபம்


குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், போசன சுகமுண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.


சிம்மம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொன்னான நாள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், நீங்கள் நல்லவர் என நினைத்தவர் அற்பத்தனமாக நடந்துகொள்ளலாம்.


கும்பம்

உறவினர் வழியில் மன திற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


மிதுனம்

குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.


கன்னி

பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், கனவு பலிதமுண்டு கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


தனுசு

குடும்பநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


மீனம்


எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலை தூரத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 1
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 26



பாதி மதியின் வெளிச்சத்தை நெடுஞ்சுவர்கள் மறைத்தன. ஆனால் ஒரு சுவரில் பதித்திருந்த இரும்பு அகல் விளக்கில் எரிந்த தீபம் கொஞ்சம் வெளிச்சம் தந்தது.

அங்கிருந்தவர்கள் அத்தனை பேரும் அன்று இரவு விருந்தின் போது அவன் பார்த்த பிரமுகர்கள் தான்; சிற்றரசர்களும் சோழ சாம்ராஜ்ய அதிகாரிகளுந்தான். அவர்கள் ஏதோ மிக முக்கியமான விடயத்தைப் பற்றிக் கலந்தாலோசிக்கவே நள்ளிரவு நேரத்தில் அங்கே கூடியிருக்க வேண்டும்.

அவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைத் தான் ஆழ்வார்க்கடியான் மதில் சுவர் மீதிலிருந்து அவ்வளவு கூர்மையாக கவனித்து கொண்டு வருகிறான். ஆழ்வார்க்கடியான் மிகப் பொல்லாத கெட்டிக்காரன் என்பதில் ஐயமில்லை. அவன் இருக்குமிடத்திலிருந்து கீழே கூடிப்பேசுகிறவர்களை ஒருவாறு பார்க்க முடியும் அவர்களுடைய பேச்சை நன்றாய் கேட்க முடியும். ஆனால் கீழேயுள்ளவர்கள் ஆழ்வார்க்கடியானைப் பார்க்க முடியாது.

அந்த இடத்தில் மாளிகைச் சுவர்களும் மதில் சுவர்களும் அவ்வாறு அமைந்திருந்தன. அத்தகைய இடத்தை ஆழ்வார்க்கடியான் எப்படியோ கண்டுபிடித்துக் கொண்டு வந்திருக்கிறான்! கெட்டிக்காரன்; தான் சந்தேகமில்லை.

ஆனால் அவனுடைய கெட்டிக்காரத்தனமெல்லாம் இந்த வாணர் குலத்து வந்தியத்தேவனிடம் பலிக்காது! அந்த வேஷதாரி வைஷ்ணவனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வந்து ஆனால் அப்படி அவனைப் பிடிப்பதாயிருந்தால், கீழே கூடியுள்ளவர்களுடைய கவனத்தைக் கவராமல் அவன் உள்ள மதில் சுவரை அணுக முடியாது. அப்படி அவர்கள் பார்க்கும்படி தான் நடந்து போவதில் ஏதேனும் அபாயம் இருக்கலாம். "இன்றைக்கு நாள் பார்த்து இவன் இங்கே வந்திருக்க வேண்டியதில்லை!" என்று சம்புவரையர் கூறியது அவன் நினைவுக்கு வந்தது.

இவர்கள் எல்லோரும் ஏதோ முக்கிய காரியமாகக் கலந்தாலோசிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்வதில் அவர்களுக்கு விருப்பமில்லையென்பது தெளிவு. அப்படியிருக்கும்போது தன்னைத் திடீரென்று அவர்கள் பார்த்தால், தன் பேரில் சந்தேகப்பட்டு விடலாம் அல்லவா? ஆழ்வார்க்கடியானைப் பற்றி அவர்களுக்குத் தான் சொல்வதற்குள் அவன் மதில் சுவரிலிருந்து வெளிப்புறம் குதித்து ஓடி விடுவான்.

ஆகையால் தன் பேரில் சந்தேகம் ஏற்படுவது தான் மிச்சமாகும். "படுத்திருந்தவன் இங்கு எதற்காக வந்தாய்?" என்றால் என்ன விடை சொல்லுவது? கந்தமாறனின் நிலைமையை சங்கடத்துக்கு உள்ளாக்குவதாகவே முடியும்.

ஆகா! அதோ கந்தமாறன் இந்தக் கூட்டத்தின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறான். அவனும் இந்தக் கூட்டத்தாரின் ஆலோசனையில் கலந்து கொண்டிருக்கிறான் போலும்! காலையில் கந்தமாறனைக் கேட்டால், எல்லாம் தெரிந்து விடுகிறது.

அச்சமயம் அக்கூட்டத்தாருக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த மூடுபல்லக்கு வந்தியத்தேவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. ஆ! இந்தப் பல்லக்கு பழுவேட்டரையருடன் அவருடைய யானையைத் தொடர்ந்து வந்த பல்லக்கு அல்லவா? அதற்குள்ளேயிருந்த பெண், ஒரு கணம் திரையை நீக்கி வெளியே பார்த்த பெண், இப்போது இந்த மாளிகையில் எந்தப் பகுதியில் இருக்கிறாளோ? அந்தப்புரத்துக்குக் கூட அவளை இந்தக் கிழவர் அனுப்பவில்லையாமே? கொஞ்சம் வயதானவர்கள் இளம் பெண்களை மணந்து கொண்டாலே இந்தச் சங்கடந்தான். சந்தேகம் அவர்கள் பிராணனை வாங்குகிறது.

ஒரு நிமிடம் கூடத் தங்களுடைய இளம் மனைவியை விட்டுப் பிரிந்திருக்க அவர்களுக்கு மனம் வருவதில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## அது ஏன்?

கற்பூரபுரியில் கேசவன் என்ற இளைஞன் இருந்தான். அவன் பல காவியங்களையும் நூல்களையும் படித்தவன். அதனால் ஊரார் அவனைப் பெரும் பண்டிதர் என்று கருதினார்கள். இதனால் அவன் மனதில் தன்னைவிடப் படித்தவர் யாருமே இல்லை என்ற எண்ணம் தோன்றி விடவே அவனுக்குக் கர்வம் வந்து விட்டது.

ஒருமுறை அந்த ஊருக்கு சாந்த சீலன் என்ற சன்னியாசி வந்தார். அக்கிராமத்தவர் அவரை ஊர்வலமாக அழைத்துப் போய் மரியாதை செய்து ஒரு பணக்காரர் வீட்டில் தங்க வைத்தார்கள். அவர் தினமும் பிரசங்கம் செய்து உபதேசிக்கும் அறிவுரைகளை பக்தி சிரத்தையுடன் கேட்டார்கள். அவருக்கு இணையாக யாரையும் அது வரை கண்டதே இல்லை என்றும் அவர்கள் புகழ்ந்தார்கள்.

இதையெல்லாம் கண்டும் கேட்டும் கேசவன் சாந்தசீலர் மீது பொறாமை கொண்டான். அவரது உபதேசங்கள் சர்வசாதாரணமானவை என்றும் தன்னால் அவற்றை விட உயர்ந்த உப தேச மொழிகளைக்கூற முடியும்எனவும்அவன்எண்ணினான். ஆனால் ஊரார் என்னவோ அவரைத் தான் பாராட்டு கிறார்களே! இது என்ன முட்டாள்தனம் என்று எண்ணி மனம் புழுங்கினான்.

ஒருநாள் அவன் சாந்த சீலரைக் கண்டு "ஐயனே! தாங்கள் என்ன என்ன படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அவரும் "சிறு வயதில் என் தாய் தந்தையர் எனக்குக் கல்வி புகட்ட எவ்வளவோ முயன்றனர். ஆனால் எனக்குப் படிப்பு ஏறவில்லை. நான் அதிகம் படிக்கவில்லை" என்றார். அப்போது கேசவன் "அப்படியானால் இந்த உபதேசங்களை எல்லாம் எப்படிக் கூறுகிறீர்கள்?" என்று கேட்டான்.

சாந்தசீலர் புன்னகை புரிந்தவாறே "புத்தகங்களில் எல்லாமே இருக்காது. அனுபவ ரீதியாகத்தான் ஒருவன் பலவற்றைக் கற்கிறான். இப்படி நான் அறிந்ததை மக்களுக்குக் கூறுகிறேன்" என்றார். கேசவனோ "சிலர் தம் அனுபவங்களைப் புத்தக வடிவில் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் நீங்கள் கூறுபவை எல்லாம் உள்ளன. அதற்கு மேலும் உள்ளன. அவற்றைப் படிப்பது மேலா அல்லது உங்களது உபதேசங்களைக் கேட்பது மேலா?" என்று அவரிடம் கேலியாகக் கேட்டான்.

சாந்தசீலரும் "அவற்றைப் படிப்பதே மேல்" எனவே கேசவனும் "நான் அவற்றை எல்லாம் படித்துப் புரிந்து கொண்டவன்" என்று கர்வப்பட்டுக் கொண்டு கூறினான். "ஆகா! நீ அதிர்ஷ்டசாலியே!" என்றார் சாந்த சீலர்.

கேசவனோ "நானா அதிர்ஷ்டசாலி? இல்லை நீங்கள்தான். உங்களை விட நான் அதிகம் படித்திருந்தும் இந்த ஊரார் என்னை மதிக் காமல் உங்களைத் தானே மதித்துப் புகழ் கிறார்கள்!" என்றான். சாந்த சீலரும் "நான் என் உபதேசங்களைக் கேட்கும்படி யாரையும் வற்புறுத்தவில்லை. என்னை கௌரவிக்கும் படி யாரிடமும் வேண்டவில்லை. மக்கள் அப்படிச் செய்கிறார்கள். அது கூட எனக்குப் பிடிக்கவில்லை தான்" என்றார்.

கேசவனும் "நான் உங்களை விட அதிகம் படித்தவன். இந்த ஊரார் உங்களை விட என்னை அதிகம் மதிக்க வேண்டும் என்றால் நான் உங்களை வாதத்தில் தோற்கடிக்கவேண்டும். அதற்கு நீங்கள் தயாரா?" என்று கேட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட் மீதான வரியை 20 ரூபாவால் அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

அனைத்து வகையான சிகரெட்கள் மீதான வரியை குறைந்தது 20 ரூபாவினால் அதிகரிக்க வேண்டும் என மதுசார மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமனசேகரவால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், கடந்த சில ஆண்டுகளில், முறையான வகையில் சிகரெட்டிற்கான வரியை அதிகரிக்காததன் காரணமாக, 84 சதவீத பங்கு உரிமை கொண்ட பிரிட்டிஷ் அமெரிக்கன் புகையிலை கம்பெனிக்கு சொந்தமான இலங்கை புகையிலை நிறுவனம் எனப்படும் பன்னாட்டு நிறுவனம் சிகரெட்டுக்கான விலையை உயர்த்தியதன் மூலம், இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்திருக்க வேண்டிய ரூபா 100 மில்லியன்களை இழந்துள்ளது.

சிகரெட் விலையை உயர்த்தியதன் மூலம் நாட்டுக்கு சேர வேண்டிய வரிப்பணம் பிரிட்டிஷ் அமெரிக்க புகையிலை நிறுவனத்தின் இலாபமாக மாறியது. இவ்வாறு வெளிநாட்டு நிறுவனங்கள் இலாபம் பெறுவதன் மூலம் உள்நாட்டு பணம் சுரண்டியெடுக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் மூலம் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றுமாறு மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் அரசாங்கத்திற்கு வலியுறுத்துகிறது. ஆகவே அனைத்து வகையான சிகரெட்கள் மீதான வரியை குறைந்தது 20 ரூபாவினால் அதிகரிக்க வேண்டும். என மதுசார மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (நி)

# டயனா கமகேவிற்கு வெளிநாடு செல்லத் தடை விதிப்பு



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவிற்கு வெளிநாட்டுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர் எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதிவரை நாட்டை விட்டு வெளியேற முடியாதென கொழும்பு பிரதான நீதிவான் நீதி மன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி, குறித்த தினம் வரையில், டயனா கமகே வெளிநாடு செல்வதைத் தடுக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரித்தானியாவிலும் இலங்கையிலும் இரட்டைக்குடியுரிமையுடன் இரண்டு கடவுச்சீட்டுகளை வைத்திருப்பதாக அவர் மீது முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# புத்தகங்களின் விலைகளை குறைக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பாடசாலை புத்தகங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் பாடசாலை மாணவர்கள் அநாதரவாக உள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனவே, பாடசாலை புத்தகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையில் அரசாங்கம் வேலைத் திட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# விபத்தில் சிக்கிய 303 பேரை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை

## வெளிவிவகார அமைச்சர் தாரக பாலசூரிய

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கனடாவுக்கு படகில் பயணித்த போது விபத்தில் சிக்கிய இலங்கையர்கள் விரைவில் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

படகு ஆபத்தில் சிக்கிய போது அதில் இருந்த தொழிலாளர்கள் தப்பி ஓடியதாக முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற மியன்மாரின் மீன்பிடிக்கப்பல் கடந்த திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூர் கடற்பரப்பில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கரை ஒதுங்கியது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக படகில் இருந்த ஒருவர் இலங்கை கடற்படைக்கு அறிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, வியட்நாம், சிங்கப்பூர் மற்றும் மலேசியா அரசாங்கங்களை தொடர்புகொண்டு குறித்த படகு தொடர்பான தகவல்களை இலங்கை பரிமாறிக்கொண்டது.

இதனையடுத்து, குறித்த படகுக்கு அருகில் பயணித்த ஜப்பானிய கப்பல் மூலம் இலங்கையர்கள் மீட்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200 | 300 |
| தக்காளி | 450 | 400 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 180 | 150 |
| கோவா | 350 | 300 | 300 | 350 |
| கரட் | 300 | 440 | 400 | 450 |
| பூசணி | 150 | 160 | 150 | 200 |
| புடோல் | 260 | 300 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 450 | 700 |
| பெரிய வெங்காயம் | 320 | 280 | 300 | 350 |
| பாகற்காய் | 600 | 700 | 450 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 150 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 | 160 |
| பயற்றங்காய் | 600 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 320 | 350 |
| பீற்றூட் | 180 | 280 | 300 | 320 |
| கறிமிளகாய் | 700 | 700 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 350 | 450 | 600 |
| போஞ்சி | 350 | 300 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | — | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 200 | 150 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 200 | 240 | 280 |
| வெங்காயப்பூ | — | 400 | — | 500 |
| முள்ளங்கி | 140 | 160 | 160 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 120 | 140 |

# சதொசவிலும் மதுபானம் விற்பனை?

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 300 சதொச கடைகளுக்கு மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை வழங்க கலால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, கலால் அறிவிப்பு பிரிவு 902 இற்கு உட்பட்ட அனைத்து சதொச கடைகளுக்கும் உடனடியாக மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் மதுபான அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்த சில சதொச நிறுவனங்கள் உரிய தகுதிகளை பூர்த்தி செய்யாததாலும் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாகவும் இந்த உரிமங்கள் வழங்குவதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்த சில சதொச கடைகளுக்கு இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# 53 நாட்களாக கடலில் தத்தளிக்கும் மசகு எண்ணெய் கப்பல்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்டு இறக்கப்படாமல் உள்ள மசகு எண்ணெய் தாங்கிய கப்பல், கொழும்புதுறை முகத்திற்கு அருகில் நங்கூரமிட்டு நேற்றுடன் 53 நாட்களை பூர்த்தி செய்துள்ளதாக பெற்றோலிய தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இந்த வருடத்துடன் 53 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதாகவும் அதே 53 வருடகாலப் பகுதியில் மசகு எண்ணெய் கப்பல், எண்ணெய் தரையிறக்கப்படாமல் இருப்பது இதுவே முதல் சந்தர்ப்பம் எனவும் பெற்றோலிய தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்தக் கப்பலுக்கான தாமதக் கட்டணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 79 இலட்சம் டொலர்களுக்கு மேல் அதிகளவில் பணமாக செலுத்த வேண்டியுள்ளதாகவும் பெற்றோலிய தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை அண்மித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி-20 மாநாட்டில் புடின் கலந்து கொள்ள மாட்டார்

(மொஸ்கோ)

அடுத்த வாரம் பாலியில் நடைபெறும் உலகத் தலை வர்களின் ஜி-20 மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கலந்து கொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் ரஷ்ய தூதுக் குழுவை ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ் ரோவ் வழிநடத்துவார். (நி)


## யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

இடம் :- யா/சன்மார்க்க மகா வித்தியாலய மண்டபம்

காலம்:- 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை

காலை 10 மணி

இப் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(13416) **அதிபர்**


## பூங்காக்களுக்கு செல்ல பெண்களுக்குத் தடை

### தடைகளை மேலும் இறுக்கமாக்கும் தலிபான்கள்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பெண்கள் பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் உடற்பயிற்சி கூடங்களுக்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உடனடியாக அமுலுக்கு வருவதாக நல்லொழுக்கத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் முகமது அகீஃப் முஹாஜிர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்தார்.

முன்னதாக ஆண்களும் பெண்களும் ஒரே நாளில் பொழுதுபோக்கு பூங்காக்களுக்கு செல்ல தடை விதித்த தலிபான்கள் வாரத்தில் குறிப்பிட்ட நாட்களை ஆண்களுக்கும் மற்ற நாட்களை பெண்களுக்கும் என ஒதுக்கியிருந்தனர்.

ஆனால், தற்போது பெண்கள் பொழுதுபோக்கு பூங்காக்களுக்கு செல்ல தலிபான்கள் முழுவதுமாக தடை விதித்துள்ளனர்.

அதேபோல் பெண்கள் உடற்பயிற்சி கூடங்களுக்கு செல்வதற்கும் தடைவிதிக்கப்படுவதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஏற்கனவே 6ஆம் வகுப்பு மேல் பெண்கள் கல்வி கற்க தடை, ஆண்கள் துணையின்றி விமானங்களில் பயணிக்க தடை, பொது இடங்களில் ஆடை கட்டுப்பாடு என பெண்களுக்கு பல கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## [உக்ரைனை விட்டு வெளியேறிய] இந்திய மாணவர்கள் ரஷ்யாவில் கல்வியை தொடரலாம்

### ரஷ்ய துணைத்தூதர் அறிவிப்பு



(மொஸ்கோ)

உக்ரைனைவிட்டு வெளியேறிய இந்திய மாணவர்கள் ரஷ்யாவில் தங்கள் கல்விலயத் தொடரலாம் என ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சென்னையிலுள்ள ரஷ்ய துணைத் தூதர் ஓலெக் அவ்தீவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலும் உக்ரைனைப் போலவே மருத்துவ பாடத்திட்டம் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனியர்களில் பெரும்பாலானோர் ரஷ்யமொழி தான் பேசுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

### பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பெறுகை-2023

தலைவர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள அலுவலகங்களுக்கு சுத்திகரிப்பு, பாதுகாப்புச் சேவை 2023 ஆம் ஆண்டின் முழு வருடத்திற்கும் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கும் வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**Supply of Goods**

| Details | | Safe House Kilinochchi | Safe House Mannar | State Receiving Home Kaithady | Certified School Atchuvely |
|---|---|---|---|---|---|
| Reference No. | | NP/30/02/02/Diet &Con/SH-Kili/ 2023 | NP/30/02/02/Diet& Con /SH-Man/ 2023 | NP/30/02/02/Diet & Con /SRH-Kai/ 2023 | NP/30/02/02/Diet & Con/CS-Achu/ 2023 |
| Non Refundable Fee | | Rs. 2000/- | Rs. 2000/- | Rs. 2000/- | Rs. 2000/- |
| S.N | Type of Food | Amount of Bid Security (Rs) | | | |
| 1 | Fresh Vegetables and Fruits | 20,000 | 15,000 | 10,000 | 20,000 |
| 2 | Meat, Eggs and Sea Foods | 14,000 | 10,000 | 8,000 | 14,000 |
| 3 | Dry Foods Packets, Tins and Bottles | 20,000 | 15,000 | 10,000 | 20,000 |
| 4 | Bakery Products | 1,000 | 1,000 | 1,000 | 1,000 |
| 5 | Consumable Items | 20,000 | 15,000 | 10,000 | 20,000 |
| If quoted all category | | **75,000** | **56,000** | **39,000** | **75,000** |

**Supply of Service**

| | Bid Number | Non Refundable Fees | Bid Security Amount |
|---|---|---|---|
| Security Service | NP/30/02/02/SC/2023 | 3,000 | 150,000 |
| Cleaning Service | NP/30/02/02/CS/2023 | 3,000 | 100,000 |

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   a) கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   b) அத்துடன், பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   c) அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை ,யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆணையாளர் அலுவலகத்தில் பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **ஆணையாளர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் 14.11.2022 ஆம் திகதி தொடக்கம் 28.11.2022 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் மேற்குறிப்பிடப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 29.11.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக **ஆணையாளர், வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். முன் ஆயத்த பெறுகைக் கூட்டம் 24.11.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு **வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் , மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** என்னும் இடத்தில் நடைபெறும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ.குருபரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள்**
**திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி : 021-205-7102 தொலைநகல் 021-205-7103**

(C-5245)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையான கனவுகளில் இருந்துதான் பொறுப்புகள் ஆரம்பமாகின்றன.
- டயானா ஹைடன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதி...

எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்பாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் (10) பாராளுமன்றத்தில் பிரசன்னமாகிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்போந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார்.

கூடவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு தமிழ் அரசியல் தலைவர்களுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த கால ஆட்சித் தலைவர்கள் இவ்வாறான உறுதிமொழிகளைத் தந்தபோதிலும் அதனை அவர்கள் நிறைவேற்றாத காரணத்தால், தமிழ் மக்கள் பல தடவைகள் ஏமாந்து போயினர்.

தவிர, இப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைக்காக முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் வைத்து தீ மூட்டி எரித்தார்.

இப்போது அதே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு முன்னதாக அவர் வாழ்ந்த அவரின் பரம்பரை வீடு தீக்கு இரையாகின.

அது அவருக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியதென்பதை உணர முடியும்.

இவையெல்லாம் நடந்த சம்பவங்கள். பொதுவில் நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக அமையட்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில், 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஒரு காலவரையறை குறிப்பிட்டு அதற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று; ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதை முதற்கண் பாராட்ட வேண்டும்.

ஏனெனில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது தன்னை ஒரு பௌத்த சிங்களத் தலைவராக பிரகடனப்படுத்தி தனது உரையை ஆற்றியிருந்தார்.

தவிர இனப்பிரச்சினை பற்றி அவர் இம்மியும் பிரஸ்தாபிக்கவில்லை. அப்படியான ஓர் அரக்கத்தன தலைமைக்கு அடுத்ததாக பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறியிருப்பது குறித்து தமிழ் மக்கள் அதீத கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

மேலும் அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று பாராளுமன்றத்தில் வைத்து பகிரங்கமாகக் கூறிவிட்டு, அதனை நிறைவேற்றத் தவறும்போது அது சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிய வாக்குறுதியை நம்பிக்கையீனத்துடன் நோக்காமல், அதற்குள் இருக்கக்கூடிய காரணிகளைப் புரிந்துகொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் தங்களை நிதானப்படுத்த வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து எல்லாக் குற்றச்சாட்டும் எங்கள் தமிழ் இனத்தின் தலையில் விழுகின்ற பேராபத்தும் உண்டென்பது இங்கு உணர்தற்குரியது.

## ஓய்வூதியக் கொடுப்பனவுகளை இரண்டு கட்டங்களாக வழங்க ஏற்பாடு
### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஓய்வூதிய கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை சரி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக திறைசேரியின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் இரண்டு கட்டங்களாக இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக திறைசேரி பணம் விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏராளமானோர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்ததாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை அனைத்து கொடுப்பனவுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனவரி முதல் எஞ்சிய காலப்பகுதிவரை கொடுப்பனவுகளுக்கு தேவையான பணத்தை விடுவிக்க திறைசேரி ஒப்புக் கொண்டுள்ளதாகவும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

## காட்டு யானைகள் அடாவடி கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டம் பகுதிக்குள் புகுந்த காட்டு யானை அங்கு வசிக்கும் மக்களை அச்சுறுத்துவதால் அங்கு குடியேற மக்கள் தயக்கம் காட்டி. வருகின்றனர்.

அண்மைய சில தினங்களாக அரச ஊழியர் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்த காட்டு யானை பயன் தரும் மரங்களை துவசம் செய்து அங்கு குடியிருக்கும் மக்களை அச்சுறுத்தி வருகின்றது.

இதனால் அப் பகுதி மக்கள் சிலர் தமது குடியிருப்புக்களில் இரவில் தங்குவதற்கு அஞ்சி வேறு இடங்களில் இரவுப் பொழுதுகளை கழித்து வருகின்றனர்.

ஓமந்தை அரச ஊழியர் குடியிருப்புக்குள் தற்போது காட்டு யானையின் அச்சுறுத்தல் அதிகளவில் இடம்பெற்று வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-299)

## மாணவியை தாக்கிய ஆசிரியர் கைது

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராகிவரும் மாணவி ஒருவரை பாடசாலையில் கொடூரமாக தாக்கியதாக கூறப்படும் ஆசிரியர் ஒருவரை ஹுங்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுமியின் தாயார் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரான ஆசிரியர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக ஹுங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மகளை ஆசிரியர் தொடர்ந்தும் தாக்கியதாக குறித்த தாய் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிறுமி தற்போது தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரான ஆசிரியர் சிறுமியின் வகுப்பாசிரியர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-7)

## யூரியா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மேற்கு விவசாய சம்மேளன விவசாயிகளுக்கான 2 ஆம் கட்ட யூரியா உர விநியோகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை முதல் கைதடி கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்பட உள்ளது.

இதன்போது ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டு, அடையாள அட்டை, சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றை கொண்டு வருமாறு நாவற்குழி மேற்கு விவசாய சம்மேள செயலாளர் அறிவித்துள்ளார். (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** 682 படைப் பிரிவு இராணுவப்படை முகாம்-புதுக்குடியிருப்பு, ஹைட்றாமணி, இரணைப் பாலை, கைவேலி (மருத்துவமனை), கோம்பாவில், புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, திம்பிலி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** இலங்கை வங்கி, சுகாதாரத் திணைக்களம், தேசிய சேமிப்பு வங்கி-வவுனியா, மக்கள் வங்கி, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா நகர சபை, வவுனியா வைத்திய சாலை, நீர் வழங்கல் (கச்சேரி), பிரதேச செயலக அலுவலகம், மன்னார் வீதி, வவுனியா கச்சேரி, புகையிரத நிலைய வீதியடி, வவுனியா நகரம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## போலி காணி உறுதி பத்து பேரும் மறியலில்

போலியான காணி ஆவணம் தயாரித்த சந்தேகநபர்களை தேடி யாழ்ப்பாணம் விசேட குற்றத் தடுப்பு விசாரணை பிரிவினர் கடந்த ஒருவார காலமாக வலைவீசி வந்தனர்.

இதன்போது சட்டத்தரணி மற்றும் யாழ்ப்பாண பிரபல பாடசாலை ஒன்றின் முன்னாள் அதிபர் உட்பட 10 பேரினை பொலிஸார் கைது செய்திருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நேற்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்ற நீதவான் நளினி சுபகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கானது விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குமாறு கோரி ஜனாதிபதி சட்டத்தரணி, சிரேஷ்ட சட்டத்தரணிகள் உட்பட 25 சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில். முன்னிலையாகி பிணை விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர்.

இதன் போது சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க வேண்டாம் என யாழ்ப்பாணம் விசேட குற்றத் தடுப்பு விசாரணை பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடுமையாக தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து சந்தேகநபர்கள் அனைவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (4-7-104)

## வலி.மேற்கு பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

(அராலி)

வலி.மேற்கு பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 17 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபையின், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட சபைக் கூட்டம் நேற்று தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

சபையில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 17பேர் வாக்களித்தனர். ஈ.பி.டி.பி கட்சியின் 3 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். ஐவர் நேற்றைய தினம் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-104)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."
*- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி.கண்டாவளை பகுதியில்

# சீரற்ற காலநிலையால் 72 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச் செயலர் பிரிவுக்குட்பட்ட விளாவோடை, காஞ்சிபுரம் பகுதியீல் பெய்த கன மழையால் 72 குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. நேற்று அதிகாலை முதல் பெய்த கனமழையால் வீடுகளுக்குள் வெள்ளம் புகு ந்துள்ளது. இதனால் குறித்த பகுதி மக்கள் பெரும் பாதிப்பு க்குள்ளாகியுள்ளனர்.



இந்நிலையில் விளா வோடை பாலத்தினால் வெள் ளம் உடைப்பெடுத்து செல்வத னால் குறித்த பாலத்தால் பய ணிக்கும் மக்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர். இது தொடர் பில் பிரதேச செயலருக்கு தெரிவித்ததை தொடர்ந்து குறி த்த பகுதிக்கு களவிஜயம் மேற் கொண்ட கண்டாவளை பிர தேச செயலரை பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த பகுதியில் நீர் தேங்காத வகையில் வடிகால் களை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்தனர். மேலும் பாதிக்கப்பட்டவர்கள் அவர்க ளின் உறவினர்களின் வீடுக ளில் தங்க வைக்கப்பட்டுள்ள னர். (நி-6-100-315-316)

# நூல்கள் வெளியீடு

(நெளுக்குளம்)

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இ.தருமபாலன் தொகுத்த மூன்று நூல்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு விருந் தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா கலந்து கொள்வார். (நி-6-299)

# இணையவழிக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலக நிறுவனத்தினால் நிகழ்த் தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 59 ஆவது நிகழ்வாக "கிழக்கிலங்கைப் பண்பாடும் பாரம் பரியமும் - ஒரு பேணுகை முயற்சிக்கான உசாவல்" எனும் தலைப்பிலான கலந் துரையாடல் நாளை சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலை தென்கிழ க்குப் பல்கலைக்கழக மேனாள் மொழித் துறை தலைவரான பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா நிகழ்த்தவுள்ளார். (நி-6)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செய லக கலாசார பேரவையால் 2022 ஆம் ஆண்டிற்கான கலைப்பகுதி மற்றும் இளங்கலைஞர் விருதுகளு க்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விருதுக்கு விண்ணப்பிக்க விரு ம்பும் கலைஞர்கள் தங்களது விண் ணப்பப் படிவத்தினை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வார்ப் பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (நி-6)

# 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(ஹற்றன்)

7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்தது.

பதுளை, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரெலியா, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இந்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்தது. (நி)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக் கடைகள்
## குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2023

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2023 ஆம் ஆண்டிற்கு (01.01.2023 - 31.12.2023) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 14.11.2022 - 28.11.2022 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 28.11.2022 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 28.11.2022 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகை - 2023" என எழுதி மூலப்பிரதியை **"தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 28.11.2022 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT, NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01. | அக்கரை கடற்கரை - வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடம் | 500.00 | 2000.00 | **61,380.00** | 500.00 |
| 02 | அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | **1,055,002.50** | 1200.00 |
| 03 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | **282,150.00** | |
| 04 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | **259,371.09** | 250.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | **346,500.00** | |
| 02 | நிலாவரை திறந்த வெளிச்சந்தையும் வாகன தரிப்பிடமும் (பொதுக்கிணறு, சுற்றுலா மையம் தவிர்த்து) | 500.00 | 2000.00 | **577,170.00** | |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | **614,889.00** | 2250.00 |
| 02 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 500.00 | 3000.00 | **437,580.00** | 2250.00 |

01. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப்பட்டியல், வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்
08. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை. தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
09. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தினை ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

(C-5246) **2022.11.12**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலை...

கடந்த 24 மணித்தியாலத்தில் 305 குடும்பங்களைச் சேர்ந்த 1025 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/410 கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

கரவெட்டி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கூடுதலான பாதிப்பாக 201 குடும்பங்களைச் சேர்ந்த 690 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு ஜே/410 கிராம அலுவலர் பிரிவில் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. பொலிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெயர்ந்த 14 குடும்பங்களை சேர்ந்த 46 பேர் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேரும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 25 குடும்பங்களை சேர்ந்த 80 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 177 பேரும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குரிய சமைத்த உணவு மற்றும் தங்குமிடவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (4-7,33,60,104)

## மிருசுவிலில்...

உறவினர்கள் அவர்களை தேடிய போது வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் உயிரிழந்த குழந்தையின் தந்தையை சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் தெற்கு மிருசுவிலைச் சேர்ந்த பி. சந்திரமதி வயது 40 மற்றும் 7 மாதம் நிரம்பிய பி. கிருஸ்ரிகா ஆகியோரே இவ்வாறு மர்மமான முறையில் வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,33,104)

## வன்முறைக்...

வியாழக்கிழமை உட்புகுந்த நால்வர் அடங்கிய வன்முறைக் கும்பல் வீட்டில் இருந்தோரை அச்சுறுத்தி வீட்டுக்கு தீ வைத்துள்ளது.

தீ வீடு முழுவதும் பரவியதில் வீட்டில் இருந்த முக்கிய ஆவணங்கள் உள்ளிட்டவை உட்பட பெறுமதியான பொருட்கள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7,33,104)

## நளினி, முருகன்...

தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் 1991ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டமொன்றில் தற்கொலை குண்டுத் தாக்குதலில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை வழக்கில் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 26 பேருக்கு சென்னை பூவிருந்தவல்லி நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

பின்னர் மேல்முறையீடு வழக்கில் சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளனுக்கு மட்டும் மரண தண்டனை உறுதியானது.

கடந்த 2000ஆம் ஆண்டு நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு பேரறிவாளன், சாந்தன், முருகனின் மரண தண்டனை உயர் நீதிமன்றினால் இரத்து செய்யப்பட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

பின்னர் பேரறிவாளனின் 30 ஆண்டுகளுக்கு மேலான சிறைவாசம், நன்னடத்தை, விடுப்புகால செயற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்திய உயர் நீதிமன்றம், தமக்கான சிறப்பு அதிகாரம் வழங்கும் அரசியலமைப்பின் 142ஆவது பிரிவின் கீழ் பேரறிவாளனை விடுதலை செய்தது.

இதனடிப்படையில் தங்களையும் விடுதலை செய்ய வேண்டும் என நளினி உள்ளிட்ட எஞ்சிய 6 பேரும் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில், ஏனைய 6 பேரும் தாக்கல் செய்த மனு உயர் நீதிமன்றில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த நிலையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து நளினி, முருகன், சாந்தன், ரவிச்சந்திரன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (4-7)

## நிதி மோசடி...

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜுலை மாதம் 16 ஆம் திகதி கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைவாக பொலிஸாரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் மக்களை ஏமாற்றி நிதி மோசடியில் ஈடுபட்டனர்.

இலங்கை ரூபாயை டொலர்களில் மாற்றித் தருவதாகவும் வாகன உதிரிபாகங்களை குறைந்த விலையில் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்து சந்தேக நபர்கள் மோசடியில் ஈடுபட்டனர்.

இவர்கள் பணத்தை குறிப்பிட்டதொரு இடத்திற்குக் கொண்டு வருமாறு அறிவுறுத்தியுள்ளதுடன், பணத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தப்பியோடியுள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை உள்ளிட்ட மாவட்டங்களில் இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (4-7)

## கோட்...

விதம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பதிவு செய்து, விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையை கடந்த ஜுன் 09ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றியபோது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் படுக்கை அறைக்குள் இருந்து போராட்டக்காரர்களால் பணம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பணம் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த கோட்டை பிரதம நீதவான் திலின கமகே விசாரணைக்கான உத்தரவை பிறப்பித்துள்ளார். (4-7)


மஹஜன சம்பத
திகதி 2022/11/11
சீட்டிழுப்பு இலக்கம் 4936
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 3 9 3 9 1 2
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.11
சீட்டிழுப்பு இலக்கம் 245
மகரம் 25 26 29 36 மகரம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1284
வெற்றி எழுத்து A | சுப்பர் இலக்கம் 22 | வெற்றி இலக்கங்கள் 17 35 75 77

கொவிசெத
திகதி 2022.11.11 | சீட்டிழுப்பு இலக்கம் 3178
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 03 22 36 62
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.11.11
சீட்டிழுப்பு இலக்கம் - 966
L 10 37 59 76
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1391
வெற்றி இலக்கங்கள்
கன்னி 9 3 7 4 1 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1911 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.11.11 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் U 20 21 37 74
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,489,120/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.11
சீட்டிழுப்பு இல : 4072
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,646,200/-
வெற்றி இலக்கங்கள் 23 24 27 71 | ஆங்கில எழுத்து P
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு 247
சீட்டிழுப்பு திகதி 2022.11.11
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 33 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,312,920/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,429,797/-
திகதி 2022-11-11
வெற்றி வாரம் 3623
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 02 06 14 31 | கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,069,960/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 24 43 46 59 67
சீட்டிழுப்பு வாரம் 1087
வர்ணம் ஊதா
திகதி 2022.11.11 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 276,490,025.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1737
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2022.11.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,785,600/-
வெற்றி இலக்கங்கள் 19 20 58 72 | ஆங்கில எழுத்து N

நாகபூசணி அருளுடன்
இன்றைய வெற்றி முழக்கம்
தேசிய லொத்தர் சபையின் NLB மகஜன சம்பத 10.11.2022 20 லட்சம் திருமதி J.P.வெஸ்ரிஜினா முகவர் ஊடாக வெல்லப்பட்டது.
தொடர்ந்து யாழ்.நகரில் தேசிய லொத்தர் சபை, அபிருத்தி லொத்தர் சபை ரிக்கெற்றுகள் வெல்லப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியே.
யாழ்.நகரமெங்கும் விசேட ரிக்கெற்றுகள் கொவிசெத NLB மற்றும் அதகோடிபதி DLB அத்துடன் தினசரி ரிக்கெற்றுகளும் வேகமாக விற்பனையாகின்றது.
வெற்றியடைய வாழ்த்துபவர்கள்
யாழ்.முகவர் - கனகலிங்கம் திலகவதி,
இல.4, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திடீர்...

எப்பட்டது.

. யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இந் நிலையில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் நேற்று கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பொக்கணை பகுதியில் திடீர் சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

சுற்றி வளைப்பின் போது ஒரு பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 24 போத்தல் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (4,7,104)

## மண்ணெண்ணெ...

இதன்படி புதிய விலை 365 ரூபா என தெரிவிக்கப்பட்டது. சுப்பர் டீசல், பெற்றோலின் விலையில் மாற்றம் இல்லை. (4-7)

## பொதுமக்கள்...

மீது பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள மக்கள் சுகாதாரம் மற்றும் உணவுக்கான உரிமைகளை அணுகுவதில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

நாட்டில் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

நிச்சயமற்ற வேலைகள் மற்றும் தினசரி ஊதியத்தை மட்டுமே வருமானமாக நம்பியிருக்கும் மக்களின் நிலை மற்றும் மலையக தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் நாட்டின் நெருக்கடி மற்றும் அதன் தாக்கங்கள் ஆழமடையும் மற்றும் பரந்த அளவில் பரவும் என்ற தீவிர கவலை உள்ளதாக மன்னிப்பு சபை குறிப்பிட்டுள்ளது. (4-7)

## இலங்கை...

இலங்கை தொடர்பான தீர்மானமும் முக்கியமானதாக அமைந்திருந்தது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பிலான இந்த தீர்மானம் 20 க்கு 7 என்ற வாக்கு விகிதத்தில் நிறைவேற்றப்பட்டது. இதே வேளை இலங்கை மீதான தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்க வேண்டியேற்படும். (4-7)

## மற்றுமொரு நிலக்கரி கப்பல் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

மற்றுமொரு நிலக்கரி கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. இந்த கப்பலில் 60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி உள்ளதாக இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அன்ரூ நவமுனி தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிலிருந்து குறித்த கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

கப்பலில் இருந்து நிலக்கரியை தரையிறக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக அன்ரூ நவமுனி தெரிவித்தார்.

இதுவரை 3 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன. (4-7)


**வேலையாட்கள் தேவை**

ஊடக நிறுவனத்தில் பணிபுரிய செய்தி வாசிப்பாளர்கள், செய்தி தொகுப்பாளர்கள் வீடியோ எடிட்டர் தேவை. (13427)

**076 126 6682**

**நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு**

மழை காலம் ஆரம்பித்து இருப்பதனால் நீர்க்கசிவு பிரச்சினையால் அவதியுறுகிறீர்களா? அப்படியானால் கவலைப்படாதீர்கள்...

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த் தொட்டி, கோவில் வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப் புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள், நீச்சல் தடாகங்கள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதத்துடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

1 சதுர அடி 150/=... இருந்து

**Skyline Water Proofing**

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
www.skylineholders.com (13418)

**ஊர்க் கோழிக் குஞ்சுகள்**

1 நாள் ஊர்க் கோழிக் குஞ்சுகள், 2 1/2 மாத கினிக் கோழிக் குஞ்சுகள், இறைச்சிக் காடைகள் விற்பனைக்கு

தொடர்பு (13426)

**077 332 2433**

**காணி விற்பனைக்கு**

முல்லைத்தீவு - உண்ணாப்பிலவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் 6.5 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (13413)

**077 089 1992**

**Sb Travels & Tours Pvt Ltd**

தற்போது Colombo to Chennai (இருவழி)
Indigo - 64000/=
Srilankan Airlines - 73000/=

விமான பயணச் சீட்டுக்களையும் Dubai, Malaysia, India, Bangkok விசாக்களையும் பெற்றுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு :

Sb Travels & Tours Pvt Ltd
No.198, Kasthuriyar Road, Jaffna (021 222 8555, 076 691 1082, 83)
No.41, Gintupitiya Street, Colombo - 13 (011 233 3322, 076 691 1089)
No.324, Aluthmavatha Road, Colombo - 15 (011 254 0280, 077 108 3481)

Email : sbtravels99@yahoo.com

(நிபந்தனைக்குட்பட்டது) (C-5248)

**கணிதம், வரலாறு 09 - O/L, A/L வகுப்புக்கள்**

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான், தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். (13420)

**077 482 5438**

**விற்பனைக்கு**

CT 100 TL XXXX
H.கிளைமோர்
BAY XXXX

தொடர்பு (13414)

**076 416 9292**

**வேலையாட்கள் தேவை**

அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. (13421)

**078 500 2635**
**077 269 2779**

**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அருகில் தேவை. (13425)

**077 367 4732**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457** (13424)

**SAM LANKA**

DIRECT IMPORTERS & DISTRIBUTORS

NO:- 367 NAVALAR RAOD, ILLUPPAIYADY JUNCTION, JAFFNA

021 222 1002, 0094 777 46 58 48, 0094 778 20 94 24

25% OFF VALID TILL 30th NOVEMBER 2022

KEVILTON Power to Innovate — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS LED LIGHTS LED PANEL LIGHTS

ORANGE ELECTRIC — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS LED LIGHTS LED PANEL LIGHTS

Wireman — ALL KINDS OF LED LIGHTS

Panasonic — ALL KINDS OF LED LIGHTS

AKRA — ALL KINDS OF LED LIGHTS

(13397)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.